# வாக்குமூலம்

## நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், ஈரோடு

## வழக்கு எண்.சி.சி.எண்.242/2023

## வழக்கு சாட்சி.அ.சா.1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜோக்லின்பாபு | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | சுந்தர் | தொழில் | : | |
| கிராமம் | : | ஈரோடு | சமயம் | : | |
| தாலுக்கா | : | ஈரோடு | வயது | : | |

(வழக்கின் 1-ம் எதிரி ஆஜர். 2-5 எதிரிகள் ஆஜர் இல்லை. 2-5 எதிரிகளின் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.09.2024**

முதல்விசாரணை

நான் தற்போது உதவி மேலாளர், தரக்கட்டுப்பாடு, தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கழகம், திருப்பூர் மண்டலத்தில் பணிபுரிந்து வருகிறேன்.

நான் சேனாதிபதிபாளையம் கேர் குடோனில் தர ஆய்வாளராக பணியாற்றியபோது, 28.12.2022-ம் தேதி ஈரோடு குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை, குற்ற எண்.280/2022 சட்டப்பிரிவுகள் 6(4) of TNSC (RDCS) Order 1982, r/w 7(i)(a)(ii) of EC Act 1955 வழக்கில் சம்மந்தப்பட்ட அரிசியை பாதுகாப்பில் வைத்திருக்கவும், பகுப்பாய்விற்கு அனுப்பவும் ஒப்படைக்கப்பட்ட 50 கிலோ எடையுள்ள 65 மூட்டைகளில் மொத்தம் சுமார் 3250 கிலோ முதல் தர புழுங்கல் அரிசி இருந்ததைப் பெற்று, அத்தாட்சி

வழங்கினேன். அத்தாட்சி அ.சா.ஆ.**1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அரிசியை மாதிரி எடுத்து பகுப்பாய்விற்காக ஈரோடு மண்டல பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பி வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

நீங்கள் சொன்ன நேரத்தில் வழக்கு சொத்துக்களை பெற்றுக் கொள்ளவில்லை என்றாலும், முறைப்படி மாதிரிகளை சேகரம் செய்யவில்லை என்றாலும், உரிய நேரத்தில் ஒப்புகை சீட்டு வழங்கவில்லை என்றாலும், சரியல்ல.

மறு விசாரணை

இல்லை.